**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

**SC. 77/2022 தேதி 23.10.2025**

**அ.சா. 5 – கலைஞர் த/பெ புகழேந்தி**

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**அ.சா. 5 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. சூளகிரி அரசு மது பானக்கடை எண் 3033 என்ற மதுபானக்கடையில் 14.08.2015 ம் தேதி எனது மாமா மணி என்பவர் தான் பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். அந்த கடையில் பணி செய்ய எனக்கு அரசு நியமனம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி மதுபானக்கடையில் நான் பணி செய்தால் சம்பளம் எதுவும் இல்லை. எனது மாமா மணி மேற்படி கடையில் சுமார் 7 வருடங்களாக மேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார். மேற்படி மதுபானக்கடையில் 2 விற்பனையாளரும் , 1 உதவியாளரும் , மற்றும் 1 மேற்பார்வையாளரும் பணிபுரிவார்கள். மேற்படி எனது மாமா மணி என்பவர் உடல்நிலை சரியில்லை என்றால் என்னை மாதத்திற்கு 1 அல்லது 2 முறை கடைக்கு வேலைக்காக அழைப்பார் நான் செல்வேன். கடையின் விற்பனை விவரம் எதுவும் எனக்கு தெரியாது.

2. சம்பவத்தன்று எனது மாமா பையில் பணம் உள்ளதாக தெரிவித்து பையை என்னிடம் கொடுத்தார். அந்த பையில் பணம் இருந்ததா என்றோ எவ்வளவு பணம் இருந்தது என்றோ தொகையின் விவரமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். கொள்ளை போன பை மற்றும் பணம் திரும்ப கிடைக்கப்பெற்றதா இல்லலையா என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. சம்பவ நடந்த அன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள் அதன் பின்னர் போலிசார் என்னை சேலம் மத்திய சிறைக்கு அடையாள அணிவகுப்பிற்காக என்னை அழைத்து சென்றார்கள். சம்பவ இடத்திலிருந்து சுமார் 100 மீ சுற்றளவில் வீடுகள் எதுவும் இல்லை என்றாலும், மேற்படி கடையை சுற்றி இருட்டாக இருக்கும் என்றாலும் சரிதான்.

3. சேலம் மத்திய சிறைக்கு நான் அருரிலிருந்து பேருந்து மூலமாக சென்றேன். மணி , வெங்கடராமன், நரசிம்மன் ஆகியோர்கள் போலிசாருடன் சேலம் மத்திய சிறைக்கு வந்தார்கள். நான் 4 வது நபராக அடையாள அணிவகுப்பில் சாட்சியை அடையாளம் காட்ட சென்றேன். எதிரிகள் என்னை தாக்கியதில் நான் சம்பவத்தன்று இரவு மட்டும் ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். என்னுடன் மணி என்பவரும் சிகிச்சை பெற்றார். சம்பவம் நடந்த உடன் போலிசாருக்கு எனது மாமா மணி தான் தகவல் தெரிவித்தார். மேற்படி கடை சூளகிரி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டு அமைந்துள்ளது. சம்பவம் நடந்து சுமார் 1/2 மணிநேரத்திற்குள்ளாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் அப்போது என்னை விசாரித்தார்,. அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அதேபோல் , எந்தவொரு பணமும் கொள்ளை அடிக்கப்படவில்லை என்றாலும், மேற்படி மதுபானக்கடையில் எனது மாமா செய்த தவறுகள் மற்றும் வரவு செலவு குளருபடிகளை மறைப்பதற்காக எனது மாமா மணி கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல போலிசார் அடையாள அணிவகுப்பிற்கு முன்பாக எதிரிகளின் போட்டாவை என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்றாலும், அதன் அடிப்படையில் நான் எதிரிகளை அடையாளம் காட்டினேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மதமும் இல்லை என்றாலும், போலிசார் கேட்டுகொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur